**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**
**––––**

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண். 162/2022 ல் இடைமனு எண். 6/2024**

சிராஜுதீன் ..மனுதாரர் / பிரதிவாதி

..எதிர்..

1. ஷேக்மைதீன்(இறந்துவிட்டார்)
2. ரபியத்துல்பஷிரியா (இறந்துவிட்டார்)
3. முகம்மது இக்பால்
4. ரஷிதாபானு
5. நூருல் ஆயின்
6. சித்திக் அனீஷ்
7. ஷபாத்து மரைக்காரயர்
8. வட்டாட்சியர் சீர்காழி
9. சார்பதிவாளர் சீர்காழி ....1 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 9 எதிர்வாதிகள்

10. முகமதாபீவி
11. தாஜிதீன்
12. சர்புன்னிசா
13. ஜமால்தீன் ...10,11,12,13 எதிர்மனுதாரர்கள்/ 10,11,12,13 எதிர்வாதிகளாக சேர்க்கப்பட வேண்டிய தரப்பினர்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 16.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. சுந்தர்ராஜ், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.உசேன்முகம்மது அவர்கள் ஆஜராகியும், 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி. விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது 10 முதல் 13 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்வாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி உ.வி.மு.ச. கட்டளை 1, விதி 10(2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.10.13 18:27:19 +0530

**2. மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. மேற்படி எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில், 1ம் எதிர்வாதியின் சகோதரியார் இறந்துவிட்டார் என்பதாலும் 1ம் எதிர்வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள சொத்தில் இறந்து போன 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தாயாருக்கும் ஒரு பாகம் உள்ளது என்பதாலும், அவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனுதாரருக்கு ஆலோசனை கிடைக்காத காரணத்தினாலும், 10 முதல் 13 எதிர்மனுதாரர்களின் தாயாரும், தகப்பனாரும் இறந்துவிட்ட காரணத்தால் தற்போது உயிரோடு உள்ள மேற்படி எதிர்மனுதாரர்களை வழக்கில் எதிர்வாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின்:**

மனுதாரரின் மனு நிலைநிற்கதல்ல. மனுதாரர்/வாதி அசல் வழக்கு தாக்கல் செய்யும் காலக்கட்டத்திலேயே இந்த எதிர்மனுதாரர் /எதிர்வாதிகளை வேண்டுமென்றே தரப்பினராக சேர்க்காமல் விட்டுவிட்டு தற்போது இவ்வழக்கை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். முதல் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட பிறகு வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை அவரது வாரிசுகளான 1 மற்றும் 7 எதிர்வாதிகள் மற்றும் தற்போது மனுதார்/வாதி தரப்பினராக சேர்க்க கோரியுள்ள 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தாயார் ஆகியோர் பாகம் பிரித்து கொண்டு அவரவர்கள் பாகத்தினை 6ம் பிரதிவாதிக்கு கிரயம் மற்றும் ஹிபா மூலமாக கொடுத்து விட்டனர் என்று இந்த விவரத்தை மனுதாரர் அசல் வழக்கில் கூறியுள்ளார். எனவே தற்போது அதன் ஆலோசனைகள் கிடைக்காத காரணத்தினால் சேர்க்கவில்லை என கூறியுள்ளது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. தீர்வு.**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.10.13 18:27:27 +0530

வருவதாகவும், முதல் எதிர்மனுதாரரின் சகோதரி இறந்துவிட்டார் என்பதாலும், முதல் எதிர்மனுதாரரின் தகப்பனாரின் பெயரில் உள்ள சொத்தில் 10 முதல் 13 எதிர்மனுதாரர்களின் தாயாருக்கும் ஒரு பாகம் உள்ளது என்பதாலும், மேற்படி எதிர்மனுதாரர்களை வழக்கில் எதிர்வாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இதற்கு 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் முதல் எதிர்மனுதாரரின் தந்தை இறந்த பிறகு வழக்கு 1, 2 அயிட்ட சொத்துக்களை அவரது வாரிசுகளான 1 மற்றும் 7 பிரதிவாதிகள் மற்றும் 10 முதல் 13 எதிர்மனுதாரர்களின் தாயார் ஆகியோர் பாகம் பிரித்து கொண்டு அவரவர்கள் பாகத்தினை 6ம் பிரதிவாதிக்கு கிரயம் மற்றும் ஹிபா மூலமாக கொடுத்து விட்டனர் என்றும் இந்த விவரத்தை மனுதாரர் அசல் வழக்கில் கூறியுள்ளதாகவும், எனவே வழக்கு தாக்கல் செய்தபோது ஆலோசனை கிடைக்கவில்லை என்பதால் தரப்பினர்களை சேர்க்கவில்லை என கூறியுள்ளது ஏற்கக்கூடியதல்ல என்பதால் மனுவை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

6. வழக்கு ஆவணங்கள் பரிசிலினையில் அசல் வழக்கானது வழக்கு 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை குறித்து பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் இறந்துவிட்டார்கள். இந்நிலையில் இறந்துவிட்ட முதல் எதிர்மனுாரரின் சகோதரியான 10 முதல் 13 எதிர்மனுதாரர்களின் தாயாருக்கும் இவ்வழக்கு சொத்தில் ஒரு பாகம் உள்ளது என்பதால், மேற்படி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள் வழக்கில் 10 முதல் 13 எதிர்வாதிகளாக சோர்க்க மனுதாரர்/வாதி அனுமதி கோரியுள்ளார். அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து கூட்டு பங்குரிமையாளர்களும் வழக்கின் அவசிய தரப்பினர்கள் என்பதால் நீதியின் நலன் கருதி வழக்கில் ஒரு முழுமையான தீர்வு காண 10 முதல் 13 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 10 முதல் 13 எதிர்வாதிகளாக சேர்க்க அனுமதி அளித்து இம்மனுவை அனுமதிக்கலாம் என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.10.13 18:27:34 +0530

7. **முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.10.13 18:27:41 +0530

சார்பு நீதிபதி.
சீர்காழி

**<u>பின் இணைப்பு</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>** – இல்லை–
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை–

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.10.13 18:27:50 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
இ.ம.எண்.6/2024–ல்
அசல்வழக்கு எண்.162/2022
நாள் –13.10.2025